# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம்** 12-06-2025 **வியாழக்கிழமை மாலை** 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

குழித்துறை ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த போது தவறி விழுந்து உயிருக்கு போராடிய இரண்டு சிறுவர்களை காப்பாற்ற தன் உயிரை நீத்த திரு. பீட்டர் ஜாண்சன் அவர்களின் தியாகத்திற்கு மதிப்பு அளிக்கும் விதமாக மார்த்தாண்டம் காய்கறி மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வணிகவளாகத்தில் அன்னாரது வாரிசுதாரர் ஒருவருக்கு வைப்பு தொகை நீங்கலாக அரசு நிர்ணயித்த வாடகை பெற்று கொண்டு ஒருகடை வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1332 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சிக்கு தேவையான எழுது பொருள்கள் 2025-2026-ம் ஆண்டிற்கு வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1225/2025/டி2.

மன்றத்தீர்மான எண்.1333 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். எம்3/3201590/2025, நாள் 17-04-2025-ல் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை நகரம் கிராமம், புல எண்கள் B2/119-2, B2/205-1, B2/205/3, B2/206-1, B2/206/3, 2/206-5, B2/206-7, B3/283-1, B3/283-3, B3/284, B3/128, B10/1. இரயில்வே துறைக்கு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலங்களானது கிராம ஆவணங்களின்படி "அரசு புறம்போக்கு - மயானம், வண்டிப்பாதை, வாய்க்கால், பாதை, சாலை, தெரு" என வகைபாடு கொண்டுள்ளது. எனினும் மத்திய அரசால் வழித்தடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டு அரசிதழில் அறிவிப்பு விளம்பரப்படுத்தப்பட்டு இருவழிப்பாதையாக மாற்றம் செய்வது தேசிய நலன் கருதிய திட்டம் என்பதால், வழிதடங்களை மாற்ற இயலாத சூழ்நிலையில் உள்ளதால், கீழ்கண்ட விவரப்படி உள்ள 0.21.72 ஹெக்டேர்ஸ் நிலத்தினை இரட்டை வழி இருப்புப்பாதை அமைக்க

இரயில்வே துறைக்கு நிலமாற்றம் செய்ய இசைவினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | புல எண் | விஸ்தீரணம் (ஹெக்) | வகைப்பாடு |
|---|---|---|---|
| 1 | B2/119-2 | 0.02.57 | அரசு புறம்போக்கு மயானம் |
| 2 | B2/205-1 | 0.00.44 | அரசு புறம்போக்கு வண்டிப்பாதை |
| 3 | B2/205-3 | 0.05.16 | அரசு புறம்போக்கு வண்டிப்பாதை |
| 4 | B3/283-1 | 0.00.18 | அரசு புறம்போக்கு பாதை |
| 5 | B3/283-3 | 0.00.45 | அரசு புறம்போக்கு பாதை |
| 6 | B3/128 | 0.00.48 | அரசு புறம்போக்கு பாதை |
| 7 | B10/1 | 0.06.25 | அரசு புறம்போக்கு சாலை, (ரோடு) |
| 8 | C7/74 | 0.03.20 | அரசு புறம்போக்கு சாலை |
| 9 | C8/13 | 0.01.38 | அரசு புறம்போக்கு பாதை |
| 10 | C8/26 | 0.01.64 | அரசு புறம்போக்கு தெரு |
| | மொத்தம் | 0.21.75 | |

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.1053/2025/F1.

மன்றத்தீர்மான எண்.1334 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பதிவறையில் போதிய ரேக் இல்லாத காரணத்தால் கோப்புகள் முறையாக பராமரிக்க இயலாத நிலையில் உள்ளதால் தற்போது கோப்புகள் முறையாக அடுக்கி வைத்து பராமரித்திட ஏதுவாக ரேக்குகள் வினியோகம் செய்யும் பணிக்கு 21-05-2025-ம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | ரேக் ஒன்றிற்கான தொகை |
|---|---|---|
| 1 | Jefflin Engineering Work | 9100 + GST |
| 2 | R. Devaraj Engineering Work | 8900 + GST |
| 3 | Suresh Constructor | 8800 + GST |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை கொடுத்துள்ள Suresh Constructor என்பவருக்கு பணி உத்தரவு வழங்கிடவும் இதற்கான செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1410/2025/டி2.

மன்றத்தீர்மான எண்.1335 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் 21 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் மனித சக்தியே மிஞ்சிய அளவில் உள்ள புல்புதர்களை அகற்றுவதற்கு (SAW) மிஷின் வாங்குவதற்கு செலவின விலைப்புள்ளி 13-05-2025 அன்று வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி பட்டியல் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | ARSHA AGRO | 24,800 |
| 2 | AB SALAM AGRO EQUIPMENTS | 23280 |
| 3 | RAJUBEARINGS | 24500 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் கொடுத்துள்ள வரிசை எண்.2-ல் AB SALAM AGRO EQUIPMENTS என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1151/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1336 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் ஆட்டோ ஸ்டாண்ட் அமைத்தல் தொடர்பாக திரு. விஜின்குமார் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு W.P.(MD)No.14480/2025-ற்கு நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்த வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்கிட திரு.P. ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை மேற்கண்ட வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1151/2025/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண்.1337 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய படிகட்டு பழைய கடை எண்.14-ற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 23-05-2025 அன்று நடைபெற்றதில் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | B. Bruno,<br>3/23-C, Bethel Street, Marthandam | 2500/- |
| 2 | T. Lawrence,<br>2-11, Nulluvilai, North Street, Marthandam | 2200/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளிலும் கூடுதல் மாத வாடகை ரூ.2500/- தெரிவித்துள்ள திரு. B. Bruno என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3066/2022/அ2.

மன்றத்தீர்மான எண்.1338 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் மூலம் மதுரை ஹோட்டல் தமிழ்நாட்டில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நகர்மன்ற உறுப்பினர்களுக்கான பயணக்கட்டணம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திருமதி.த.ரா. ஜெயந்தி | 1000 |
| 2 | திருமதி.செ. லலிதா | 1000 |
| 3 | திரு.செ. ஆட்லின் கெனில் | 1000 |

| | | |
|---|---|---|
| 4 | திரு.வா. விஜு | 1000 |
| 5 | திருமதி.கெ.சு. மினி குமாரி | 1000 |
| 6 | திருமதி.ஜா.க. றோஸ்லெட் | 1000 |
| 7 | திருமதி.அ. லில்லி புஷ்பம் | 1000 |
| 8 | திரு.அ. அருள்ராஜ் | 1000 |
| 9 | திருமதி.சா.பீ. ஜலீலா ராணி | 1000 |
| 10 | திருமதி.உ.ரா. விஜயலெஷ்மி | 1000 |

மேற்படி நகர்மன்ற உறுப்பினர்களுக்கு எதிரே தெரிவிக்கப்பட்டுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.934/2022/அ2.

மன்றத்தீர்மான எண்.1339 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சி நகரமைப்பு பிரிவில் உள்ள கணினி அடிக்கடி பழுதடைந்து நகரமைப்பு பிரிவு பணிகள் (வரைபட அனுமதி மற்றும் Type works) செய்ய இயலவில்லை. மத்திய அரசின் திட்டமான PM Svanidhi Se Samiridhi திட்டத்தின் கீழ் பணிகள் செய்ய ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பட்டுள்ளது. எனவே திட்ட நிதியிலிருந்து நகரமைப்பு பிரிவிற்கு தேவையான கணினி (ஒன்று) மற்றும் பிரிண்டர் (ஒன்று) வாங்கிட 06-06-2025 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | NEW MODEREN COMPUTERS | 77,600/- |
| 2 | AKSHOTHA COMPUTERS | 78,200/- |
| 3 | DELL EXCLUSIVE STORE | 73,200/- |

மேற்படி வரப்பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக DELL EXCLUSIVE STORE என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கிடவும் இதற்கான செலவினத்தொகையினை PM Svanidhi Se Samiridhi-லிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1473/2025/எப்1.

மன்றத்தீர்மான எண்.1340 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 100-வது வாவுபலி பொருட்காட்சிக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியானது 09-05-2025 அன்று கோரப்பட்டதில் ஏலத்தில் இருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலம் கோர முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.1,01,01,010/- யாக திரு.வி.ய. விஜயலால் .தெரிவித்திருந்தார். இத்தொகையானது முந்தைய ஆண்டை விட பல மடங்கு குறைவாக இருந்த காரணத்தினால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியானது ரத்து செய்யப்பட்டு மறு ஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி 29-05-2025 கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. குறுகிய கால ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் 10-06-2025 அன்று நடைபெற்றதில் ஒருநபர் மட்டும் கலந்துக்கொண்டதில் ஏலம் கோர முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது வருமாறு.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1. | திரு.M. பால்ராஜ்,<br>த/பெ. மாணிக்கம்,<br>படப்பறை,குழித்துறை | ஏலம் கோர முன்வரவில்லை | 1,77,07,000 |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தைய ஆண்டைவிட ரூ.8,44,000/- கூடுதலாக கோரியுள்ளார். எனவே திரு.M. பால்ராஜ் அவர்கள் தெரிவித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.650/2025/அ2.

மன்றத்தீர்மான எண்.1341 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சியில் மகப்பேறு மாதுவாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள திருமதி.A. டிசோபல் மற்றும் தூய்மை பணியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள திரு.D. செல்வின் என்பவர்களின் ஊதியத்தில் பிடித்தம்

செய்யப்பட்டுள்ள சிறப்பு சேமநல நிதியின் (SPF) நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.20,000/- (10,000 + 10,000) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1707/2024/பி1.

மன்றத்தீர்மான எண்.1342 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.